## பரிசுத்த பவுல் ஆலயம், குவைத்

# அஹமதி தமிழ் திருச்சபை

**தமக்குப் பயந்து, தமது கிருபைக்குக் காத்திருக்கிறவர்கள் மேல் கர்த்தர் பிரியமாயிருக்கிறார்.**

சங. 147:11

செய்தி மலர்
2021
ஜூன்

இதழ் : 2
மலர் : 18



# சபை ஊழியரின் அன்பு மடல்



கிறிஸ்துவிற்குள் அன்பான திருச்சபை குடும்பத்தாரே எல்லாம் வல்ல இறைவன் இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் எல்லோரும் நலமாக இருப்பீர்கள் என்று விசுவாசிக்கிறேன். என்னுடைய ஆவலும் அனுதின ஜெபமும் அதுவே.

கடந்த மே மாதம் முழுவதும் கண்மணி போல பாதுகாத்து வழி நடத்தின தேவன் வரும் ஜுன் மாதத்திலும் நம்மை கரம் பிடித்து வழி நடத்துவாராக.

சங்கீதக்காரனாகிய தாவீது சொல்கிறான் "தமக்கு பயந்து தமது கிருபைக்கு காத்திருக்கிறவர்கள் மேல் கர்த்தர் பிரியமாயிருக்கிறார்" (சங்கீ–147:11)

ஆம் பிரியமானவர்களே, யாரெல்லாம் கர்த்தருக்கு பயந்து இவ்வுலக காரியங்களில் ஈடுபடாமல் பழி பாவங்களுக்கு அஞ்சி நீதி நியாயஞ்செய்து கர்த்தருடைய கிருபைக்காக காத்திருக்கிறார்களோ அவர்கள் மேல் கர்த்தர் பிரியமாயிருக்கிறார்.

## 1. யோபுவைப்போல..

மிகப்பெரிய செல்வந்தன் உலகப்பிரகாரமாக அநேக ஆஸ்திகளை சம்பாதித்தவன். அவனுக்கு ஏழு குமாரரும் மூன்று குமாரத்திகளும் பிறந்தார்கள். அவனுடைய குமாரர்கள் ஒவ்வொரு வருஷமும் அவரவர் தன் தன் நாளிலே தன்தன் வீட்டிலே விருந்து செய்து தங்கள் 3 சகோதரிகளையும் தன்னுடனே போஜனம் பண்ணும்படி அழைப்பார்கள்.

விருந்து செய்கிற அவரவருடைய நாள் முறை முடிகிற போது யோபு ஒரு வேளை என் குமாரர் பாவஞ்செய்து தேவனை தங்கள் இருதயத்திலே தூஷித்திருப்பார்கள் என்று சொல்லி அவர்களை அழைத்தனுப்பி பரிசுத்தப்படுத்தி அதிகாலமே எழுந்து அவர்களுடைய எல்லாருடைய இலக்கத்தின்படியேயும் சர்வாங்க தகன பலிகளை செலுத்துவான். இந்தப்பிரகாரமாக யோபு அந்நாட்களிலெல்லாம் செய்து வருவான். (யோபு–1:2–5) அந்த அளவிற்கு யோபு கர்த்தருக்கு பயந்து இவ்வுலக கறை திரைகளுக்கு விலகி உத்தமனாய் வாழ்ந்தான். என்ன நடந்தது தெரியுமா? இவ்விதமாய் ஒருநாள் தங்கள் மூத்த சகோதரன் வீட்டிலே கூடியிருக்கும்பொழுது வனாந்திர வழியாய் பெருங்காற்று வந்து அந்த வீட்டின் நாலு மூலையிலும் அடிக்க அவன் பத்து பிள்ளைகளும் இறந்து போனார்கள். பிசாசு அந்தக்குடும்பத்தை சோதித்தான். ஆனால் யோபுவோ கர்த்தருடைய கிருபைக்கு காத்திருந்தான்.

3 அவன் சொன்னான், "கர்த்தர் என்னைக் கொன்று போட்டாலும் அவர்மேல் நம்பிக்கையாயிருப்பேன்" (யோபு–13:15)

இப்படி எவ்வளவோ போராட்டங்கள் வேதனைகள் மத்தியிலும் யோபு தன் பொறுமையைக் காத்துக்கொண்டான். நாட்கள் கடந்தது. கர்த்தர் யோபுவோடு நேரிடையாகப் பேசினார்.

அவன் இழந்த எல்லாவற்றையும் ஆண்டவர் திரும்பக்கொடுத்தார். யோபின் முன்னிலைமையைப் பார்க்கிலும் அவன் பின்னிலைமையை ஆசீர்வதித்தார். 14000 ஆடுகளும், 6000 ஒட்டகங்களும், 1000 ஏர்களும், 1000 கழுதைகளும் அவனுக்கு உண்டாயின. ஏழு குமாரரும் மூன்று குமாரத்திகளும் அவனுக்கு பிறந்தார்கள். தேசத்தில் எங்கும் யோபின் குமாரத்திகளை போல் சௌந்தரியமான பெண்கள் காணப்படவில்லை. அவர்கள் தகப்பன் அவர்கள் சகோதரரின் நடுவிலே அவர்களுக்கு சுதந்தரம் கொடுத்தான். இதற்கு பின்பு யோபு 140 வருஷம் உயிரோடிருந்து நான்கு தலைமுறையாக தன் பிள்ளைகளையும் பிள்ளைகளுடைய பிள்ளைகளையும் கண்டான். எத்தனை ஆசீர்வாதங்கள் பாருங்கள். நாமும் யோபுவைப் போல கர்த்தருக்கு பயந்து எவ்வளவு சோதனைகள் வருத்தங்கள் இழப்புகள் துன்பங்கள் சூழ்ந்து கொண்டு நம்மை அலைக்கழித்தாலும் கர்த்தரை சார்ந்து பொறுமையோடு அவர் கிருபைக்கு காத்தருக்கும்பொழுது இழப்புகள் எதுவும் நேரிடாமல் கர்த்தர் நம்மை அளவில்லாமல் ஆசீர்வதிப்பார்.

## 2. தாவீதைப் போல..

எத்தனையோ போராட்டங்கள் தாவீதை சூழ்ந்திருந்தது ஒரு பக்கம் பெலிஸ்தியர் தாவீதை நெருக்கினார்கள். மறுபக்கம் தன் நாட்டின் சொந்த அரசன் சவுல் அவனைக் கொல்ல பார்த்தான். எல்லா சூழ்நிலையின் மத்தியிலும் தாவீது கர்த்தரை பற்றிக்கொண்டான். தன் பாடுகள் மத்தியில் தாவீது சொன்னான் "என் பெலனாகிய கர்த்தாவே உம்மில் அன்பு கூறுவேன், மரணக்கட்டுகள் என்னை சுற்றிக்கொண்டது துர்ச்சன பிரவாகம் என்னை பயப்படுத்தினது. பாதாளக் கட்டுகள் என்னை சூழ்ந்துகொண்டது. மரணக்கண்ணிகள் என்மேல் விழுந்தது. எனக்குண்டான நெருக்கத்திலே கர்த்தரை நோக்கி கூப்பிட்டு என் தேவனை நோக்கி அபயமிட்டேன். தமது ஆலயத்திலிருந்து என் சத்தத்தைக் கேட்டார். என் கூப்பிடுதல் அவர் சந்நிதியில் போய் அவர் செவிகளில் ஏறிற்று. உயரத்திலிருந்து அவர் கை நீட்டி ஜலப்பிரவாகத்தில் இருக்கிற என்னை தூக்கி விட்டார். அவர் விசாலமான இடத்திலே என்னைக் கொண்டு வந்து என்மேல் பிரியமாயிருந்தபடியால் என்னை தப்புவித்தார். (சங்கீ–18:1–19)

ஆம் பிரியமானவர்களே, கர்த்தர் தாவீதோடே கூட இருந்தார். அவன் போன இடத்திலெல்லாம் கர்த்தர் அவனைக் காப்பாற்றினார். தாவீது என் இருதயத்திற்கேற்றவன் என்று சாட்சி பகர்ந்தார். மகிமையான வாழ்க்கையை வாழ்ந்து பூரண வயது வரைக்கும் சகல ஆசீர்வாதங்களோடு வாழ்ந்தான்.

இன்றைக்கு இஸ்ரவேலின் தேசிய கொடியிலே ஒரு நட்சத்திரம் காணப்படுகிறது. அதை இஸ்ரவேலர்கள் தாவீதின் நட்சத்திரம் என்று அழைக்கிறார்கள். அந்நாட்டை பாதுகாக்க ஒரு ரேடார் கருவி பொருத்தியிருக்கிறார்கள். அந்த ரேடாருக்கு தாவீதின் கவசம் என்று பெயரிட்டிருக்கிறார்கள். அந்த ரேடார் எதிரி நாட்டவரிடமிருந்து வருகிற ஏவு கணைகளை வானத்திலேயே தடுத்து அழித்து விடும். இதுதான் ஆண்டவருடைய கிருபை. நாமும் பொறுமையாக துன்பங்களையும் பாடுகளையும் சகிக்க வேண்டும். அப்பொழுது கர்த்தர் நமக்கும் கிருபை பாராட்டுவார். நம் மேல் பிரியமாயிருப்பார்.

## 3. பவுல் அப்போஸ்தலனைப் போல..

ஆண்டவர் பவுலை ஊழியத்திற்காக அழைத்த நாளிலிருந்து உண்மையும் உத்தமுமாக ஆண்டவருக்காக பணி செய்தான். புறஜாதிகளிடம் சென்று சுவிசேஷத்தை அறிவித்ததினாலே பலசமயங்களிலே அவன் கல்லெறியுண்டான். கசையடிகள் வாங்கினான். எந்த சூழ்நிலையிலும் கர்த்தரை விட்டு அவன் பின் வாங்கவில்லை. முன் வைத்த காலை அவன் பின் வைக்கவுமில்லை. கர்த்தருடைய கிருபைக்கு மாத்திரம் காத்திருந்தான். அவன் சொன்னான் நான் எந்த நிலைமையிருந்தாலும் மனரம்மியமாக இருக்க கற்றுக்கொண்டேன். தாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும், வாழ்ந்திருக்கவும் எனக்கு தெரியும். எவ்விடத்திலும் எல்லாவற்றிலும் திருப்தியாயிருக்கவும் பட்டினியாயிருக்கவும் பரிபூரணமடையவும் குறைவு படவும் போதிக்கப்பட்டேன்.

என்னை பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்கு பெலனுண்டு. எல்லாம் எனக்கு கிடைத்தது. பரிபூரணமும் உண்டாயிருக்கிறது. நான் திருப்தியடைந்திருக்கிறேன். (பிலி – 4:11–18)

ஆம் பிரியமானவர்களே, கர்த்தரால் தெரிந்து கொள்ளப்பட்ட கிருபையின் பாத்தரமாகிய பவுலின் கைகளினால் அநேக நிருபங்கள் எழுதப்பட்டது. அநேக சபைகள் ஸ்தாபிக்கப்பட்டது. ஆசியா மற்றும் ஐரோப்பிய கண்டங்கள் முழுவதையும் கிறிஸ்துவுக்குள்ளாக கொண்டு வந்தான். அவனுடைய சுவிசேஷம் அவ்வளவு வலிமை வாய்ந்தது. ஆண்டவர் பவுலின் மேல் அவ்வளவு பிரியமாயிருந்தார். அதற்கு ஒரே காரணம் அவன் கர்த்தருக்கு பயந்து அவரைப் பற்றிக்கொண்டு எல்லா சூழ்நிலையிலும் உபத்திரங்களை பொறுமையாய் சகித்து கர்த்தருடைய கிருபைக்கு காத்திந்ததே ஆகும்.

என் அன்பு சகோதர, சகோதரிகளே நாமும் கூட யோபுவைப் போல தாவீதைப் போல பவுல் அப்போஸ்தலனைப் போல கர்த்தரையே பற்றிக்கொள்வோமாக.

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய கிருபை உங்கள் அனைவரோடுங்கூட இருப்பதாக.

கிறிஸ்த்துவுக்குள்
அன்பு சகோதரன்
சபையின் ஊழியர் சகோ. ஸ்டாலின்

# யார் கிறிஸ்த்தவன்

## 1. பாவத்தை விட்டு மனந்திரும்பினவன் :

அப் 2:36: 17:30

மனந்திரும்புதல் எல்லாருக்கும் உரியது ஏனென்றால் எல்லாருமே பாவிகள்தான் துர்குனத்தில் உருவானேன் . என்தாய் என்னை பாவத்தில் கர்ப்பம் தரித்தாள் என்ற தாவீது அரசன் கூறுகின்றார்.சங் 51: 5 எல்லோரும் பாவிகள் என்று வேதம் கூறுகிறது. ரோமர் 3:1012,23 எனவே எல்லாரும் மனந்திரும்ப வேண்டும். மனந்திரும்பினவனே கிறிஸ்தவன்.

நான் கிறஸ்தவ பெற்றோருக்குப் பிறந்தவன், நான் பாவியா?

பிறப்பிலே கிறிஸ்தவன் ஒருவனுமேயில்லை. கிறிஸ்துவில் பிறந்தவனே கிறிஸ்தவன். எங்கள் அப்பா கிறிஸ்தவர், அதனால் நான் இயேசுவுக்கு பேரபிள்ளை என்று கூறமுடியாது. இன்ஜீனியருக்கு பிறந்ததினாலே நீங்கள் இன்ஜீனியரல்ல, டாக்டருக்கு பிறந்ததினாலே நீங்கள் தானாகவே டாக்டரல்ல. எங்க அப்பா டாக்டர் அதனாலே நான் அறுவை சிகிச்சை செய்ய போகிறேன் என்று சொல்லி அறுவாளுடன் புறப்பட்டால் ஊரே அலறி ஓடிவிடும், யோவான் ஸ்நானன், இயேசு, பின்பு கேருது யாவருமே மனந்திரும்புங்கள் என்று பிரசங்கித்து பக்த்தியுள்ள யூதர்களுக்குத்தான் என்பதை மறந்து விடாதிருங்கள். அவர்களும் மனந்திரும்ப வேண்டியது, கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்தாலும் நாம் பாவிகளாகவே தான் பிறக்கிறோம். எனவே மனந்திரும்ப வேண்டியது மிக அவசியம்.

## திருமுழுக்கு பெற்று கொள்ளுங்கள் : அப் 2:38 மாற்கு 16:16

மனந்திரும்பின பின் செய்ய வேண்டிய காரியம் திருமுழுக்கு பெறுதல், பேதுரு சொன்னது "நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்தனம் பெற்றுக் கொள்ளுங்கள்" அப் 2:36.

ஞானஸ்தானஸ்திற்கு முன் வரவேண்டியது மனந்திரும்புதல். மனந்திரும்பினவர்களுக்கு ஞர்ஸ்தானம் கொடுப்பதே வேத ஒழுங்கு, திருமுழுக்கைக்குறித்து " நீங்கள் எந்த ஞானஸ்தானம் பெற்றீர்கள்?" என்ற தலைப்பில் புத்தகம் எழுதியுள்ளேன். வாங்கி வாசித்துப்

( தொடர்ச்சி14 ஆம் பக்கம் )

நம் கர்த்தராகிய இயேசுவின் இனிய நாமத்தில் அஹமதி தமிழ் சபை விசுவாசிகளுக்கு வாழ்த்துதல் சொல்லி எழுதும் அன்பின் செய்தி.

சங்கீ-121-1 "எனக்கு ஒத்தாசை வரும் பர்வதங்களுக்கு நேராக என் கண்களை ஏறெடுக்கிறேன்."

பொதுவாக மனுஷர்களாகிய நாம் நம்மால் என்ன செய்யமுடியும் என்று பார்த்து அவைகளை எல்லாம் செய்ய நம்முடைய புத்தி, அறிவு பெலனைக்கொண்டு என்னென்ன செய்ய முடியும் என்று முயற்சி செய்வதுதான் இயல்பு. ஆனால் எல்லாம் செய்த பின்பு ஒன்றும் வாய்க்கவில்லை மனிதர்கள் கைவிட்டார்கள் என்று உணரும்போதுதான் வேறு வழியில்லை என்று கடைசியாக தேவனை தேட ஆரம்பிக்கிறோம்.
வேதத்தில் பெரும்பாடுள்ள ஒரு பெண்ணின் நிலையை பார்க்கிறோம். தன் வியாதிக்காக தன் சொத்துக்களை எல்லாம் இழந்த போதிலும் குணமடையாமல் கடைசியாக இயேசுவின் மேல் நம்பிக்கை வைத்து இயேசுவின் வஸ்திரத்தை தொட்டாகிலும் நான் குணமாவேன் என்று தன்னுடைய இருதயத்தில் விசுவாசத்தோடு அவருடைய வஸ்திரத்தை தொட்டு சுகம் பெற்று தன்னுடைய வாழ்க்கையில் ஆசீர்வாதத்தை பெற்றுக்கொண்டாள்.

ஆகார் என்ற ஒரு பெண்ணின் சம்பவத்தை பழைய ஏற்பாட்டில் பார்க்கிறோம் எல்லாவற்றையும் இழந்து ஜீவன் தப்பிக்க வழியில்லாத நேரத்தில் தன் மகன் மரிக்கப் போகிறதை பார்க்க சகிக்ககூடாத நிலையில் ஆண்டவரை நோக்கி கூப்பிட்டாள். தேவன் அந்த சூழ்நிலையிலிருந்து ஜீவன் தப்பிக்க வழியை உண்டு பண்ணினார். அதனால் அவள் ஆண்டவருக்கு என்னை காண்கிற தேவன் என்று பெயரிட்டாள்.

ஆபிரகாமுடைய வாழ்க்கையில் தன் ஒரே குமாரனான ஈசாக்கை பலியிடும்படி தேவன் சொன்ன போது, அப்படியே கீழ்ப்படிந்து ஈசாக்கை பலியிடும்படியாக பலிபீடத்தை உண்டாக்கி அதின் மேல் தன் மகனை பலியிடும் கடைசி தருணத்தில் ஆண்டவருடைய சத்தம் ஆபிரகாமுக்கு கேட்டது. "பிள்ளையாண்டான் மேல் கையை போடாதே" என்று. ஆனால் கர்த்தர் ஆபிரகாமுக்கு ஒரு ஆட்டுக்கடாவை காண்பித்து, அதை பலியிட்டு ஆண்டவரை தொழுது கொண்டான்.

பிரியமானவர்களே, இதுதான் கடைசி என்று நாம் வாழ்க்கையில் நினைக்கும் அந்த நேரத்திலும் கர்த்தரை நோக்கி கூப்பிட்டால் அந்த நேரத்தை நம் வாழ்க்கையின் தொடக்கமாக மாற்ற வல்லமையுள்ள தேவனை நாம் ஆராதிக்கிறோம் என்பதை மறந்துவிடாமல் முழு விசுவாசத்தோடு தேவனை பற்றிக்கொண்டு வாழ தேவன் உங்களுக்கு உதவி செய்வாராக. ஆமென் அல்லேலூயா.

1. சங்கீ-121:2 "வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தரிடத்திலிருந்து எனக்கு ஒத்தாசை வரும்"

பிரியமானவர்களே, நமக்கு ஒத்தாசை செய்கிறவர் எப்படிப் பட்டவர் என்பதை தெரிந்து இருந்தால்தான் இவர் செய்வாரா? இல்லையா என்றும் உணர முடியும். நம்முடைய தேவனுக்கு வானம் அவருடைய சிங்காசனமாகவும் பூமி அவருடைய பாதபடியாய் இருக்கிறது என்று வேதம் சொல்கிறது. அப்படியினால் எந்த அளவிற்கு அவர் பெரியவர் என்று நாம் விசுவாசிக்கிறோமோ? அந்த அளவுக்கு அவர் நம் வாழ்க்கையில் பெரிய காரியங்களை செய்ய வல்லவராக இருக்கிறார். இதுதான் நம் விசுவாசத்தின் அளவுகோல். "கர்த்தர் பெரியவரும் துதிக்கப்படத்தக்கவருமாயிருக்கிறார், எல்லா தேவர்களிலும் பயப்படத்தக்கவர் அவரே" I-நாளா-14:25. அவரிடத்தில் பெரிய பெரிய காரியங்களை செய்ய எதிர்பார்ப்போம், விசுவாசிப்போம் நம்முடைய வாழ்க்கையில் பெரிய காரியங்களை செய்கிறவர்களாக மாறுவோம். ஆமென். அல்லேலூயா.

என்னுடைய வாழ்க்கையில் ஆரம்ப நாட்களில் என் நிலையை நான் எண்ணி பார்க்கிறபோது ஒன்றுமில்லை என்றுதான் சொல்லுவேன். தினந்தோறும் வேலை செய்தால்தான் சாப்பாடு. ஆனால் பாவியாகிய என்னை தெரிந்துகொண்ட தேவன் அவரை அறியும்படியான நாட்களை கொடுத்து அவருடைய ஆசீர்வாத்தை சுதந்தரிக்கும்படியாக என்னை வழி நடத்துகிறார். அதற்காக தேவனுக்கு நான் நாள்தோறும் நன்றி செலுத்துகிறேன். அப்படியே உங்களையும் உங்கள் குடும்பங்களையும், பிள்ளைகளையும் ஆசீர்வதிப்பாராக. அமென் அல்லேலூயா.

I.சங்கீ-121:3 "உன் காலை தள்ளாடவொட்டார், உன்னைக் காக்கிறவர் உறங்கார்" உலகத்தில் பிறந்த நாம் அனைவரும் வயது சென்றவர்களாய் மாறும் போது நம்முடைய சரீரம் பெலவீனம் அடைந்து கை, கால்கள், தலை நடுக்கம் போன்ற எல்லாவற்றையும் சந்தித்துத்தான் ஆக வேண்டும். அதனால் நம்முடைய சரீர பெலன் இப்படியே இருக்கும் என்று நாம் யாரும் எண்ணமுடியாது. அவரவர் வாழ்க்கையில் இவைகள் அனைத்தையும் நாம் கடந்து போக வேண்டும்.

உன் காலைத் தள்ளாடவொட்டார் என்பது விசுவாசத்தை குறித்து சொல்லப்பட்டது. நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கையில் நம் உள்ளான மனுஷன் பெலவீனப்படும்போது, தள்ளாடும் போது, திகைக்கும் போது, கூனி குறுகும் போது, விசுவாச தளர்ச்சி வரும்போது நம்மை அப்படியே விட்டுவிடாமல் நம்மை தாங்கி பெலன் தந்து திரும்பவும் எழுந்து நிற்கவும் நிலைப்படுத்தி தேற்றுவதைத்தான் தள்ளாடவிட மாட்டார் என்று விசுவாசிக்கிறோம்.

அவர் நெரிந்த நாணலை முறியாமலும் மங்கியெரிகிற திரியை அணையாமலும் நியாயத்தை உண்மையாக வெளிப்படுத்துவார். அவர் நியாயத்தை பூமியிலே நிலைபடுத்தும் மட்டும் இளக்கரிப்பதுமில்லை பதறுவதுமில்லை. அவருடைய வேதத்திற்கு தீவுகள் காத்திருக்கும் வானங்களைச் சிருஷ்டித்து அவைகளை விரித்து பூமியையும் அதிலே உற்பத்தியாகிறவைகளையும் பரப்பினவரும் அதில் இருக்கிற ஜனத்திற்கு சுவாசத்தையும் அதில் நடமாடுகிறவர்களுக்கு ஆவியையும் கொடுக்கிறவருமான கர்த்தராகிய தேவன் சொல்லுகிறதாவது, ஏசாயா-42:3-5

உங்கள் விசுவாசத்தை தள்ளாடவிட மாட்டார் காரணம் விசுவாசத்தை உங்களுக்குள் தொடங்கியவர் அவரே அந்த விசுவாசத்தை உங்களை கொண்டு முடிக்கிறவரும் அவரே. அதனால் தொடங்கவும் முடிக்கவும் தெரிந்தவருக்கு நடத்த தெரியாதா? தேவன் நம்மை அவருடைய பலத்த கரங்களுக்குள் வைத்து இருக்கிறார். நாமோ அவருடைய கரத்தில் இருந்து விலகி போக மனதுள்ளவர்களாக தன் சுயநலத்திற்காக அவருடைய சித்தத்தை விட்டு விலகி போகிற போது நம்மை பார்த்து விட்டுபிடிக்கிறார்.

3.புதிய ஏற்பாட்டில் மாற்கு 4:35-41-ல் இயேசு தன் சீஷருடன் அக்கறைக்கு போகையில் வாருங்கள் என்று அழைத்து கடல் பயணத்தை தொடங்கினார். ஆனால் பயணத்தின் பாதியில் படவு நிரம்பத்தக்கதாக அலைகள் அதின் மேல் மோதிற்று. காரணம் பலத்த சுழற்காற்று உண்டானது. அதனால் சீஷர்கள் பயந்து போய் நாம் எல்லாரும் மடிந்து போய்விடுவோமோ? என்று எண்ணினார்கள். அப்பொழுதுதான் இயேசுவை எழுப்பினார்கள். ஆனால் இந்த சுழற்காற்று அடிக்கும்போது கூட படகின் பின்னனையத்தில் தலையனை வைத்து இயேசு நித்திரையாயிருந்தார் என்று வேதம் சொல்கிறது.

நம்முடைய ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் புயல் வந்தாலும், காற்று அடித்தாலும் விசுவாச வாழ்க்கையில் தத்தளித்தாலும் நமக்கு நல்ல சமாதானத்தையும், நித்திரையும் தருவார். ஆனால் உலக மனிதர்களால் அப்படி இருக்க முடியாது. தேவன் தான் அதை நமக்கு கொடுக்கிறார்.

இந்த சீஷர்கள் இயேசுவை எழுப்பி போதகரே நாங்கள் மடிந்து போகிறது உமக்கு கவலையில்லையா? என்றார்கள். அவர் எழுந்து காற்றை அதட்டி கடலைப் பார்த்து இரையாதே, அமைதியாயிரு என்றார். அப்பொழுது காற்று நின்று போய் மிகுந்த அமைதல் உண்டாயிற்று. அதனால்தான் இயேசு சொன்னார் என்னிடத்தில் உங்களுக்கு சமாதானம் உண்டாகும் பொருட்டு இவைகளை உங்களுக்கு சொல்லுகிறேன் "உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு ஆனாலும் திடங்கொள்ளுங்கள் நான் உலகத்தை ஜெயித்தேன்" யோவா-16:33

நீங்களும், நானும் இயேசுவினிடத்தில் விசுவாசமுள்ளவர்களாக இருக்கும்போது அவருடைய ஜெயத்தை நம் வாழ்க்கையில் தருகிறார். ஆமென், அல்லேலுயா.

கர்த்தரின் பணியில்,
கிறிஸ்துவுக்குள்
அன்பு சகோதரர்
பால் ஜெகந்நாதன்

என் ஜனங்கள் ஒருபோதும்
வெட்கப்பட்டுப்போவதில்லை. (யோவேல் 2:26)

## 2021 மே மாத வேத வினாவுக்கு விடை

1. இயேசு – லூக்கா 3: 21 –
2. இயேசு – லூக்கா 18: 1
3. இயேசு – லூக்கா 19: 10 –
4. நாயீன் ஊர் விதவையின் மகன் – லூக்கா 7: 11,15
5. லாசரு – லூக்கா 16: 20,21 –
6. சிமியோன் – லூக்கா 2: 29
7. இயேசு – லூக்கா 4: 46 –
8. லூக்கா 1: 31ல்
9. மார்த்தாள் – லூக்கா 10: 40 –
10. தேவதூதன் – லூக்கா 1: 37
11. பானுவேல் – லூக்கா 2: 36,37 –
12. இளைய குமாரன் – லூக்கா 15: 18,21
13. இளைய குமாரன் – லூக்கா 15: 20 –
14. சீஷர்கள் – லூக்கா 24: 30,31
15. லாசரு – லூக்கா 16: 22, 23

## 2021 மே மாத வேத வினாவுக்கு பதில் எழுதியவர்கள்

Sis. சுகந்தி தம்பு குமார்

Sis. எழிலரசி டேனியல்

Sis. மெர்ஸிலின் தயா இயேசுரெத்தினம்

Sis. வனிதா காளிமுத்து

Sis. ஹெலன் ஷீஜா ராபின்

Sis. ஷீபா பிரசாத்

Sis. அனுஷா டினோ

Sis. லதா கிறிஸ்டோபர்

Sis. ஷீபா அருண் இம்மானுவேல்

……..உன் சந்ததிக்கு இந்தத் தேசத்தைக் கொடுப்பேன்.. *ஆதியாகமம் 12:7*

## ..உன் சந்ததியை மிகவும் பெருகப்பண்ணுவேன்; ... (ஆதி - 16:10)

## இந்த மாதம் பிறந்த நாளை சிறப்பிக்கிறவர்கள்

சகோ. ஜான் கெட்சன்
செல்வி. ஜெஸ்லி டேனியல்
செல்வன். வெங்கடேஷ் ராஜன்
சகோதரி. அனிதா ஆரோக்கியதாஸ்
சகோ. ராபின்ராஜ்
செல்வி. ஆஸ்லின் கெசியா
செல்வி. சாரா மெர்சிலின் மேஷாக்
செல்வன். மெல்வின் ஸ்டீவ் மேஷாக்
சகோ. ஜெஸ்டின்
சகோ. ஜஸ்டிஸ் விஜல் குமார்
செல்வன். கிங்ஸ்டன் ஐசக்
செல்வன். ஜேக்கப் ஜெயக்குமார்
செல்வன். ராயன் சதீஷ்குமார்
சகோ. பிரசாத் சுந்தரரேசன்
சகோதரி. ஜெகதாம்பாள் ராஜவேல்
சகோதரி. நிர்மலா யேசுதாஸ்
சகோதரி. அனிதா ஜெஸ்டின்
செல்வன். ஜுயன் வின்சன் ஜெபசிங்
சகோ.பிபின் ரிச்சர்ட்
செல்வன். சாமுவேல் ஸ்டாலின்
சகோ. வெங்கடேஷ் ஜெபராஜ்
சகோதரி. நித்யா ரோஸ் ஜோன்ஸ்
செல்வி.ஹதாஷ் லினு ஜினு
செல்வன். ஜெய்சன் பாலகிருஷ்ணன்
சகோ. கிரன் குமார்
செல்வி. பிரவீனா லாசர்
சகோதரி. டெய்சி ரோஸ் எபெநேசர்
செல்வன். ஷெர்வின் சிவகுமார்
சகோ. ஜோஷ்வா தோனி
சகோ. ஆன்டனி பாபு
சகோதரி. ஷோபியா மேஷாக்
சகோ. பக்தராஜ்
செல்வன். ஜோஷ்வா ஜான்ஸன்
சகோதரி. ஷீபா பிரசாத்
செல்வன். ரனால்டோ ஜோசப்
செல்வி.பியூலா கலியமூர்த்தி
சகோதரி. வனிதா .K
சகோதரி.இசைவாணி வில்கின்ஸன்
செல்வி. ரேஷ்மா அசோக்குமார்
சகோதரி. அக்நேஷ் எலிசபெத் யோவான்
செல்வி. எபிஷா ஜானி எபிநேசர்
செல்வன். நிபதின் ஹரீஷ்
செல்வி. நோயல் யோவா தாமஸ்
சகோதரி.பிரிமிதா ரூத் பிருகிதா
செல்வன். ஜாண் ஜெரேமியா மில்லர்
சகோதரி. பாக்கியா ரவிஜாண் பீட்டர்
செல்வி. ஜெனி டேனியல்
செல்வன். கவின் அந்தோனி
சகோ.கிறிஸ்டோபர் . M
சகோ. ஜஸ்டின்

## இந்த மாதம் திருமண நாளை சிறப்பிக்கிறவர்கள்

### உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும(ஆதி .22:18)

திருமதி & திரு. பால் ஜெகநாதன்
திருமதி & திரு. வினோத்குமார்
திருமதி & திரு. சதீஷ்குமார். E
திருமதி & திரு. M. யேசுதாஸ்
திருமதி & திரு. டேவிட்ஜெயகுமார்
திருமதி & திரு. ஜெரேமியா
திருமதி & திரு. ஐசக்துரை
திருமதி & திரு. மகேஷ் ராஜ்
திருமதி & திரு. ராஜ்

" 

# 2021 ஜுன் மாத நிகழ்ச்சி நிரல்

## ஞாயிறு ஆராதனை நேரம் மாலை 5:00 முதல் 6:15 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 06/06/2021 | சகோ. ஃபிராங்ளின்(NBTC) | சகோ.தாமஸ் |
| 13/06/2021 | சகோ. ஆரோக்கியராஜ் | சகோ.பிரசாத் |
| 20/06/2021 | சகோ. ஜக்துரை | சகோ.அசோக்குமார் |
| 27/06/2021 | சகோ. கிருஸ்டோபர் (GTC) | சகோ. சுகுமார் |

## வெள்ளி ஆராதனை நேரம் காலை 10 முதல் 12 வரை மாலை 3:30 முதல் 5:00

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 04/06/2021 | சகோ.வேலுராமர் | சகோ. ஸ்டாலின் |
| 11/06/2021 | சகோ. இயேசு ரெத்தினம் | சகோ. ஜெயசேகர் |
| 18/06/2021 | உபவாச திருவிருந்து ஆராதனை | |
| 25/06/2021 | சகோ. ரவிஜான் பீட்டர் | சகோ. ஜெகநாதன் |

**10/06/2021 அன்று முழு இரவு ஜெபம்**
இடம் – பின்னர் அறிவிக்கப்படும்
நேரம் – இரவு 10:00 முதல் அதிகாலை 1:00 மணிவரை

**10/06/2021 அன்று வாலிபர் ஐக்கிய கூடுகை**
இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு
நேரம் – மாலை 6:00 முதல் இரவு 8:30 மணிவரை

15 வயதிற்கு கீழுள்ள சபையின் பிள்ளைகளுக்கு நமது சபை வீட்டில் வைத்து அனைத்து வெள்ளிகிழமைகளிலும் காலை 10 மணி முதல் மதியம் 12 மணி வரை ஆராதனை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது பெற்றோர்களுடன் ஆராதனையில் கலந்து கொண்டு தேவ ஆசீர்வாதத்தை பெற்று செல்லவும், ஞாயிறு ஆராதனை தற்சமயம் சபை வீட்டில் வைத்த மாலை 6 மணி முதல் 8:00 மணி வரை நடைபெறுகிறது செவ்வாய் கிழமைகளில் குடும்ப ஆசீர்வாத ஜெபம் மாலை 6:30 மணி முதல் 8:00 மணி வரை நடைபெறுகிறது அனைவரும் கலந்து கொண்டு தேவ ஆசீர்வாதத்தை பெற்றுச் செல்லவும் ( சபையின் அனைத்து ஆராதனையிலும் தவறாமல் கலந்து கொள்ளவும்)

# 2021 ஜுன் மாதத்திற்கான வேத வினா!

கீழ் கண்ட கேள்விகளுக்கு சரியான பதிலை வசனம் மற்றும் அதிகாரத்துடன் குறிப்பிடவேண்டும்

1. தன் பிராணனைக் காக்க புறப்பட்ட போன தீர்க்கதரிசி யார். ?
2. யார் ? எதற்கு எதிராக "குதித்து ஆடினார்கள்"?
3. கர்த்தரிடத்தில் ஞானமுள்ள இருதயத்தை கேட்டவன் யார்?
4. சாலொமோனின் முப்பதினாயிரம் அமஞ்சி வேலையாட்கள்மேல் விசாரிப்பகாரனாக இருந்தவன் யார்?
5. சாலொமோனின் அரண்மனை விசாரிப்பகாரனாக இருந்தவன் யார்?
6. சாலொமோனின் குமாரத்தியின் பெயர் என்ன?
7. சாலொமோன் ராஜாவின் பிரதான மந்திரி பெயர் என்ன?
8. அப்பங்கள் வைக்க ஒரு பொன் மேஜையை உண்டாக்கின ராஜா யார்?
9. காகங்கள் கொண்டு வந்த அப்பமும் இறைச்சியும் புசித்த தீர்க்கதரிசி யார்?
10. எலியா ஒரு காளையை பாகாலின் தீர்க்கதரிசிகளுக்கு முன் பலி செலுத்தி தேவனை மகிமைபடுத்தின மலை எது?
11. ஒரே குறைவுள்ள இரு மனிதர் யார் யார்?
12. இரட்சிக்கபட்ட பலிபீடத்தின் கொம்புகளை பிடித்துக் கொண்டவர்கள் யார்?
13. எலியாவுக்கு முன்குப்புற விழுந்து வணங்கிய மனிதன் யார் ?
14. அடையும், தண்ணீரையும் சாப்பிட்டவன் யார்?
15. நியாயம் விசாரிக்க ஒரு நியாய விசாரணை மண்டபத்தை கட்டின ராஜா யார்?

விடைகளை வருகின்ற 20-06-2021க்குள்(whatsApps #66015503) என்ற எண்ணுக்கு பெயருடன் குறிப்பிட்டு அனுப்பும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள். வேதாகமத்தில் 1 இராஜாக்கள் அதிகாரம் 3.4,5,7,15,17,18,19.புத்தகத்தில் இருந்து பதிலை கண்டுபிடிக்கவும்

– – –தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; –மத்தேயு 7:7

## பெருமையில்லாத ஊழியர்

**புனித பேசில் (330 –379)**
**மண்ணில்: 330**
**விண்ணில்: 1.1.379**
**ஊர்: சிசெரியா**
**நாடு: கப்பதோக்கியா**
**தரிசன பூமி: சிசெரியா**

பதவியும் பட்டங்களும் பெறுவது மட்டுமா வாழ்க்கை? இல்லை, இல்லவே இல்லை.

சிலர் பதவி வந்ததும் தங்களையும் மறப்பர். தங்களைச் சுற்றி உள்ளோரையும் மறந்து விடுவர். இப்படிப்பட்ட உலகத்தில் ஓர் முன்மாதிரியான வாழ்க்கை வாழ்ந்து காட்டியவர் தான் பேசில். கல்வியில் சிறந்தவர். கற்றுத்தந்தவர்களையும் மிஞ்சியவர். பேச்சிலலே வல்லுநர். நட்புப் பாராட்டுவதில் நல்லுள்ளம் கொண்டவர். சொற்பொழிவாற்றுவதில் சிறந்தவராகக் காணப்பட்டதால் நீதிமன்றத்தில் வழக்கறிஞரானார். புகழும் செல்வமம் அவரைத் தேடி வந்தன. பல பதவிகளும் அவரை நாடி வந்தன. நண்பர்கள் வட்டம் நாலாபுறமும் இருந்து குவிந்தது. பரிகிரகெரி என்பவர் மட்டுமே இவரின் உண்மை நண்பராக உறுதுணையானார்.

பதவியில் நம்மைப் பறிகொடுத்துவிட்டால் பின்னர் பரிதாபம்தான். பேசல் இதை உணர்ந்தார். பெருமை என்னும் சோதனைக்கு உள்ளாவதை வெறுத்தார். தன்னைத் தேடி வந்த பதவிகள் அனைத்தையும் உதறித் தள்ளினார். தன் செல்வமனைத்தையும் எடுத்து தரித்திரர், நோய்வாய்ப்பட்டோர் போன்றவர்களைப் பராமரிக்கவும், ஆண்டவரின் அன்பு, தியாகம் போன்றவைகளை எடுத்துரைக்கவும் பயன்படுத்தினார். அருட்பணிக்கே முதலிடம் கொடுத்தார்.

வழக்கறிஞர் தொழிலை விட்டு, துறவறம் மேற்கொண்டார். ஏழைகளை அரவணைத்து அவர்களுக்குப் பலவித உதவிகளையும் செய்தார். நாள்தோறும் இவரின் பிரசங்கத்தைக் கேட்க மக்கள் கூட்டம் கூழனர். மக்களுக்காகவே, சிறந்த போதகராய் மாறி அவர்களின் ஆன்மீக வாழ்வை உயர்த்தினார். ஆயிரக்கணக்கானோர் மறுபிறப்படைந்தனர். அன்பரே! மக்களுக்காக வாழ்ந்த இம்மாமனிதரைப் போன்று சுயநலமில்லா வாழ்க்கை வாழ ஆயத்தமா?

தாழ்மையுள்ளவர்களுக்கோ தேவன் கிருபை அளிக்கிறார். யாக்–4:6

கிறிஸ்துவுக்குள் அன்பு சகோதரர்

சி. சுகுமார்

(5 ஆம் பக்கத்தின் தொடர்ச்சி)
பாருங்கள். நான் எந்த குறிப்பிட்ட சபைப் பிரிவிற்கும் வக்காலத்து வாங்கி எழுதவில்லை. யார் எதை எழுதினாலும். போதித்தாலும் வேதவசனத்துடன் ஒப்பிட்டு பாருங்கள். வசனத்திற்கு ஏற்ற போதனைகளை ஏற்று அதற்குக் கீழ்ப்படியுங்கள்.

பரிசுத்த ஆவியை பெற்றுக் கொள்ளுங்கள்.: அப் 2:36, 19:2

இந்த அனுபவம் எல்லா விசுவாசிகளுக்கும் உரியது. ஒரு குறிப்பிட்ட சபைபிரிவினருக்கு மட்டும் உரியதல்ல. இந்த அனுபவத்தை அப்போஸ்தலர் பெற்றிருந்தனர் . ஆதிசபையார் பெற்றிருந்தனர். நீங்களும் பெற்றுக்கொள்ளலாம். பெந்தகொஸ்தே என்ற யூத பண்டிகை நாளில் இதை பெற்றனர். எனவே இந்த அனுபமுடையவர்கள் பெந்தகொஸ்தே சபையார் என்று அழைக்கின்றனர் . சபைப் பிரிவுகள் உண்டாகுமுன்பே ஆதிமுதல் கிறிஸ்தவர்கள் பரிசுத்த ஆவியின் நிறைவை பெற்றிருந்தனர். பரலோகம் போவதற்காக பெறுவதல்ல இந்த அனுபவம். இந்த உலகில் ஆவிக்குறிய பெலனடைந்து வல்லமையான சாட்சியாக விளங்க அரிய பெரிய காரியங்களை கர்த்தருக்காக சாதிக்க இது கொடுக்கப்படுகிறது. அநேகர் இந்த அனுபவத்தை குறித்து தவறான கருத்துடையவர்களாக இருக்கின்றனர் வேத வசன ஆதாரத்துடன் இதை குறித்து தெளிவான போதனை இல்லாதது ஒரு காரணம். இந்த அனுபவத்தை பெற்ற சிலர் நடந்து கொள்ளும் விதம் அவர்கள் பழக்கவழக்கங்கள் மற்றுமொரு காரணம். நீங்கள் பாவ மன்னிப்பின் நிச்சயத்தை பெற்றிருந்தால் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற தகுதியுடையவர்கள்.

## தல சபை உருவாவதின் முக்கியத்துவம்:

பேதுரு பிரசங்கம் பண்ணின போது வசனத்தை ஏற்றுக் கொண்டவர்கள் ஞானஸ்தானம் பெற்று ஒரு தல சபையாக கூடி கர்த்தரை ஆராதிக்க ஆரம்பித்தனர். இவர்கள்தான் முதல் திருச்சபையான எருசலேம் சபையார். தல சபை அங்கே உருவாயிற்று, வளர்ந்த பெருகிற்று. அப்போஸ்தலர் எங்கெங்கு சென்றாலும் நற்செய்தியை அறிவித்து தல சபைகளை உருவாக்கினார்கள். பிலிப்பு மூலம் சமாரியாவில் தல சபை உருவாயிற்று. அந்தியோகியா சபை விசுவாசிகளால் உருவாயிற்று ரோமாபுரி, கொரிந்தி, கலாத்தியா, எபேசு, பிலிப்பு, கொலோசே, தெசலோனிக்கே, ஆகிய பட்டணங்களில் தல சபைகள், ஆரம்பிக்கபட்டு அவர்களுக்கு பவுல் நிருபங்களை எழுதினதாக பார்க்கிறோம். ஸ்தல சபைகளை நடத்த மூப்பர்கள் , கண்காணிகள் , உதவிக்காரர்கள், ஏற்படுத்தபட்டனர். .......

## வாலிபர் பகுதி

"அவர் உங்களை விசாரிக்கிறபடியினால் உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்துவிடுங்கள்" 1-பேது-5:7

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே உங்கள் யாவருக்கும் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். கொள்ளை நோயினால் உலகமே மரண பீதியில் இருக்கும் இந்த கொடுமையான காலத்தில் தேவன் நமக்கு கொடுக்கும் நல்ல வாக்கு தத்தம் "அவர் நம்மை விசாரிக்கிறவர் ஏதேனும் பாடுகள் தேவைகள் எதிர்பார்ப்புகள் மத்தியில் இருக்கும் நீங்கள் உங்கள் மனக்கவலைகளை அவர்மேல் வைத்துவிடுங்கள்.

உலக காரியங்கள் உங்களுக்கு எதிர்மறையாக இருக்கலாம். ஒன்றுமில்லாத வனாந்திரத்திலே 40 வருடம் இஸ்ரவேல் ஜனங்களை வழிநடத்தின தேவன் நம்முடைய தேவன்.

லூக்-10-ம் அதிகாரத்தில் வாசிக்கிறோம் மார்த்தாள் மரியாள் என்ற இரு சகோதரிகள் வீட்டில் இயேசு பிரவேசிக்கையில் மார்த்தாள் தலைகால் புரியாமல் அநேக காரியங்களை குறித்து கவலைபட்டு கொண்டிருந்தாள். ஆனால் அவளுடைய சகோதரியாகிய மரியாளோ தன்னைவிட்டு எடுபடாத நல்ல பங்காகிய இயேசுவின் பாதத்தை தெரிந்துகொண்டு அவருடைய வேத வசனத்தை கேட்டுக்கொண்டிருந்தாளாம். இயேசு கிறிஸ்துவினிடத்தில் மார்த்தாள் தன் கவலைகளை குறித்து முறையிடுகையில் இயேசு சொன்னார். மரியாளை போல நல்ல பங்கை தெரிந்து கொள் என்று கூறினாராம்.

அருமையான தேவனுடைய பிள்ளைகளே, இப்படியாக மார்த்தாளை போல நீங்களும் அநேக காரியங்களை குறித்து கலங்கி கொண்டு இருக்கலாம். எதற்கும் கலங்காமல் கர்த்தருடைய பாதத்தை பிடித்துக்கொள்ளுங்கள். சூழ்நிலையைப் பார்த்து சோர்ந்து போகாதிருங்கள்.

"சிங்கக்குட்டிகள் தாழ்ச்சியடைந்து பட்டினியாயிருக்கும் கர்த்தரை தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையும் குறைவு படாது. சங்கீ-34:10 கூறுகிறது. இந்த வார்த்தையின் பிரகாரமாக தேவன் நம்மை நடத்துவார்.

1–சாமு 1–ம் அதிகாரத்தில் அன்னாள் என்ற பெண்மணி குழந்தை பாக்கியம் இல்லாமல் கஷ்டப்பட்டு கொண்டிருந்தாளாம். அவள் சக்களத்தி அவளை ஏளமாய் பேசி அநேக முறை அவள் மனதை காயப்படுத்துகிறவளாய் காணப்படுகிறாள்.

அன்னாள் தேவன் நம்மை விசாரிக்கிறவர் என்பதை நன்கு அறிந்திருந்தபடியால் தேவனுடைய பாதத்தில் விழுந்து மனங்கசந்து மிகவும் அழுது, கர்த்தரை நோக்கி குழந்தை பாக்கியத்திற்காக விண்ணப்பம் பண்ணினாளாம். கர்த்தர் அடைத்திருந்த கர்ப்பத்தை திறந்து சாமுவேல் தீர்க்கதரிசியை கொடுத்தார் என்று வாசிக்கிறோம்.

பிரியமானவர்களே அவர் நம்மை விசாரிக்கிற தேவன் உங்களுக்கும் ஏதேனும் தேவைகள் இருக்கலாம். உலகம் கைவிட்டிருக்கலாம். ஆனால் நம்முடைய தேவன் ஒரு போதும் கைவிடுவதில்லை. நம்மை விட்டு விலகுவதில்லை.

கர்த்தர் தாமே நம் அனைவரோடுங்கூட இருப்பாராக. ஆமென்.

## வாலிபம் இயேசுவுக்கே.

### உலகின் முதன்மை பெண்கள் தொடர்ச்சி.

1. காமன் வெல்த் நாடுகளில் நீதிபதியாக நியமிக்கப்பட்ட முதல் பெண் அன்னாசாண்டி (இந்தியா)
2. தன்னந்தனியாக. ஒரு படகில் உலகை வலம் வந்த முதல் பெண் காட்டக் ( ஆஸ்திரேலியா)
3. ஆங்கிலக் கால்வாயை, நீந்தி கடந்து சென்ற முதல் பெண் மரியா லூயிஷா ( ஸ்பெயின்)
4. நயாகரா நீர்வீழ்ச்சியை, ஒரு கயிற்றின் மூலம் தாண்டிய முதல் பெண் மரியா ஷெபல் டெர்னியா, ( இந்தியா)
5. எவரெஸ்ட் சிகரத்தை அடைந்த முதல் பெண் ஜங்கோ தாபே ( ஜப்பான்)
6. உலகின் முதல் பெண் பைலட் மிஸ்யேல் பிங்கல் ஸ்டிங் (இஸ்ரேல்)
7. உலகின் அதிபர் பதவி வகித்த முதல் பெண், சிரிமாவோ பண்டார நாயகா, (இலங்கை)
8. மருத்துவ துறையில் நோபல் பரிசு பெற்ற முதல் பெண், கொடி கோரி ( அமெரிக்கா )

## சகோதரிகள் பகுதி

இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அனைவருக்கும் என் அன்பின் வாழ்த்துக்கள். இச்செய்தி மலர் மூலம் உங்களை சந்திப்பதற்காக கர்த்தராகிய தேவனை ஸ்தோத்திரிக்கிறேன்.

ஆதியிலே தேவன் எல்லாவற்றையும் படைத்தார். அவருடைய சாயலாக படைத்த மனிதர்களாகிய நமக்கு மாத்திரம் விசேஷமாக பேசும் கிருபையை தந்திருக்கிறார்.

நாம் உடல் நலமில்லாமல் ஒரு மருத்துவரிடம் செல்லும் போது நாக்கை நீட்ட சொல்லி பரிசோதிக்கிறார். அதே போல் தேவனும் நம்மை தேவபக்தி உள்ளவர்களை தேவன் பிரியப்படுகிற பாத்திரங்களா என்று நம் நாவை பார்த்து சோதித்து அறிகிறார்.

நம்முடைய நாவை அடக்க பழகுவது எப்படி என்று வேதாகமத்திலிருந்து சில வசனங்களை பார்க்கலாம். ஏனென்றால் யாக்–1:26–ல் "உங்களில் ஒருவன் தன் நாவை அடக்காமல் தன் இருதயத்தை வஞ்சித்து தன்னை தேவ பக்தியுள்ளவனென்று எண்ணினால், அவனுடைய தேவ பக்தி வீணாயிருக்கும்."

யாக்–3:8 நாவை அடக்க ஒரு மனுஷனாலும் கூடாது. அது அடங்காத பொல்லாங்குள்ளதும் சாவுக்கேதுவான விஷம் நிறைந்ததாயுமிருக்கிறது. நாவை அடக்க மனுஷனால் முடியாது என்று வேதம் தெளிவாய் காட்டுகிறது. ஆனாலும் நாம் நம்முடைய நாவை தேவனுக்கு பிரியமானபடி வாழ கற்றுக்கொள்ள வேண்டும்.

யாக்–3:2–ல் தேவன் நாவை நமக்கு கடிவாளமாய் குறிப்பிடுகிறார். குதிரைகள் நமக்கு கீழ்படியும்படிக்கு அவைகளின் வாய்க்கு கடிவாளம் போட்டு முழுச்சரீரத்தையும் திருப்பி நடத்துகிறோம். கப்பல்களை மிகப் பெரியவைகளாயிருந்தும் கடுங்காற்றினால் அடிபடாமலும் சிறிய சுக்கானாலே போக வேண்டிய திசைக்கு இடத்திற்கு திருப்ப முடிகிறது. அது போலவே நாவானது, சிறிய அவயமாயிருந்தும் பெருமையானவைகளையும் பேசும், ஒரு சிறிய நெருப்பு எவ்வளவு பெரிய காட்டையும் கொளுத்தி விடும். தேவன் மனிதனுடைய நாவை நெருப்பிற்கு ஒப்பிடுகிறார். நாவு அநீதி நிறைந்த உலகம். முழுச் சரீரத்தையும் கறைப்படுத்தி ஆயுள் சக்கரத்தை கொளுத்தி விடும். மரணமும் ஜீவனும் நாவில் அதிகாரத்திலிருக்கும்.

கிறிஸ்தவர்களாகிய நம் நாவு எப்படி இருக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார் என வசனங்களைப் பார்ப்போம்.

1. சங்கீ–34:13 உன் நாவை பொல்லாப்புக்கும் உன் உதடுகளை கபட்டு வசனிப்புக்கும் விலக்கி காத்துக்கொள்.
2. தேவனை துதிக்கும் துதி எப்பொழுதும் வாயிலிருக்க வேண்டும்.
3. திக்கற்ற பிள்ளைகளும் விதவைகள் படுகிற உபத்திரவத்திலே அவர்–களை விசாரிக்க வேண்டும்
4. தன் வாயையும் தன் நாவையும் காக்கிறவன் தன் ஆத்துமாவை இடுக்கண்களுக்கு விலக்கிக் காக்கிறான்.
5. நீதிமானுடைய வாய் ஜீவ ஊற்று
6. சொல் தவறாதவனாயிருக்க வேண்டும்
7. துதித்தலும் சபித்தலும் ஒரே வாயிலிருந்து புறப்படக்கூடாது.
8. கல்விமானின் நாவு இளைப்படைந்தவனுக்கு சமயத்திற்கேற்ற வார்த்தை சொல்லும், தேவன் காலை தோறும் எழுப்பி கற்றுக்கொடுப்பார்.
9. நீதிமானுடைய நாவு நியாயத்தை பேசும்.
10. அவரை நோக்கி என் வாயினால் கூப்பிட்டேன். அவர் என் நாவினால் புகழப்பட்டார்.

தேவன் விரும்பாத காரியங்கள் (நாவுகள்) பேசுகிறதற்கு பொறுமையாயும், பொய் பேசாமலும் புறங்கூறாமலும் பெருமைகளை பேசாமலும் ஒருவருக்கொருவர் விரோதமாய் பேசாமலும் பொய் நாவினால் பொருளை சம்பாதிக்காமலும் மாறுபாடுள்ள நாவில்லாமலும் கெட்ட வார்த்தைகள் பேசாமலும் பிறனை முகஸ்துதி செய்யமலும் இருக்க வேண்டும்.

வாய்க்குள்ளே போகிறது மனுஷனைத் தீட்டுப்படுத்தாது. வாயிலிருந்து புறப்படுகிறதே மனுஷனைத் தீட்டுப்படுத்தும். தேவ பிள்ளைகளாகிய நாம் கர்த்தரை எந்நாளும் துதித்து அவருடைய வசனத்தை தியானித்து நம்மை பரிசுத்தப்படுத்தி மாசற்றவர்களாயும் நீதிமான்களையும் அவர் சந்நிதி முன் நிற்க தேவன் தாமே நமக்கு உதவி செய்வாராக.

சங்கீ–34:19 நீதிமானுக்கு வரும் துன்பங்கள் அநேகமாயிருக்கும். கர்த்தர் அவைகள் எல்லாவற்றிலும் நின்று அவனை விடுவிப்பார்.

தேவனுக்கு மகிமையுண்டாவதாக.

கிறிஸ்துவுக்குள்
அன்பு சகோதரி
கீதா ஜெயக்குமார்.

# கடந்த மாத நிகழ்வுகள் தங்களின் பார்வைக்கு சில




















# உங்களுக்கு ஊழியம் செய்ய எங்களுக்காக ஜெபியுங்கள்

## செயற்குழு உறுப்பினர்கள்



சபை முதன்மை ஊழியர்

**சகோ. ஜெயசேகர்**

96646444



செயலாளர்

**சகோ. இயேசு ரெத்தினம்**

23924262 - 97545812



பொருளாளர்

**சகோ. ஜெகநாதன்**

66889535 - 98852812



பெண்கள் ஐக்கிய தலைவி

**சகோதரி . எப்சிபா ஸ்டீஃபன்**

67792009 - 56640551



வாலிப ஐக்கிய தலைவர்

**சகோ. பிரசாத் சுந்தரேசன்**

60781168


Church Website Address - ahmaditamilcongregation.org

Church ‘E’ mail ID - ahmaditamil.kw@hotmail.com

Church Postel Address

Your name - Po. Box no 46795. 64018, fahaheel ,Kuwait


தங்களது ஜெப விண்ணப்பங்கள்

எதுவாக இருந்தாலும்

எங்களுக்கு தெரிவிக்கவும்

உங்களுக்காக ஜெபிக்க

ஒரு குழு ஆயத்தமாய் இருக்கிறது.


Private Circulation only